

போதிஞர்

திரு. ஜி. டி. நாயுடு,

கோபால் பாக்,

அவனுசி ரோடு,

கோயமுத்தூர்.

இந்தி எதிர்ப்பு

திரு. ப. அ. துரைசாமி,

சக்தி தோட்டம்,

பழனிக்கவுண்டன்புதூர்,

பன்னிமடை அஞ்சல்,

கோயமுத்தூர்–17.

திரு. ப. அ. துரைசாமியின் பேச்சு (26-1-69)

இந்தி மொழி பேசாத மாநிலங்களின் இந்தி எதிர்ப்பு மாநாட்டின் தலைவர் திரு. சுப்பாராவ் (இந்தியாவின் தலைமை நீதிபதி) அவர்களே! மாநாட்டுக்காக இடவசதியும், பிரதிநிதிகளுக்கு உணவு, உறைவிடம் போன்ற தேவைகளை சிறப்பாகச் செய்து கொடுத்து, தன்னுடைய பொன்னான நேரத்தையும், பயன் கருதாத பெரும் பணத்தையும் செலவிட்டுள்ள விஞ்ஞான மேதை, பேரறிஞர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களே! முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களே! திரு. பரமேசுவரன் பிள்ளை அவர்களே! சர் பி. டி. ராஜன் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! மாணவர்களே! மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

நாம் அனைவரும் இந்தி மொழி திணிப்பை கண்டிப்பதற்காகவும், தொடர்ந்து அவ்வாறு செய்யாமல் தடுப்பதற்கான வழி வகைகளை ஆராய்வதற்காகவும், ஆங்கிலமே தொடர்ந்து மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் இருக்கும்படி செய்வதற்காகவும் கூடியிருக்கிறோம். சென்ற முப்பது வருட காலமாகவே இந்தியை மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை படிப்படியாக திணித்துக் கொண்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் விவசாய உற்பத்தியிலும், தொழில் உற்பத்தியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டு இந்தியை எல்லோரும் பேசும்படியாக செய்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் மொழி திணிப்பிலேயே முழு கவன

மும் செலுத்தி வருகிறது. இந்தி மொழி திணிப்பால் மாநிலங்களுக்கு பிரிவினை உணர்ச்சி வளர்ச்சி அடைந்து வருகிறது. இதைப் பலரும் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் எதையும் கேட்பதாகத் தெரியவில்லை.

கிராம நல ஊழியர்களை "கிராம சேவக்" என்றும் விவசாயிகளை "கிஷான்கள்" என்றும் ஜனாதிபதியை "ராஷ்டிரபதி" என்றும் இந்தியாவை "பாரத்" என்றும் மாற்றுவதிலேயே நேரத்தையும், பணத்தையும் செலவிட்டு வருகிறார்கள். பெயர் மாறுதல்களைச் செய்து இந்தி மொழியைத் திணிப்பதால் மட்டும் மக்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயர்ந்து விடுமா? மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேக் காட்டிலும் தாழ்ந்து போய் மிகக் கேவலமான நிலையில் இருக்கிறது. இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பசியாலும், பட்டினியாலும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உணவுக்காக வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய இழிநிலையில் இருக்கிறோம். பென்சில் அல்லது பேனா செய்வதற்கு கூட வெளிநாட்டின் கூட்டுறவும், தொழில் நுணுக்க உதவியும் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட இழிநிலைகளைப் போக்குவதற்கு முயற்சியும், திட்டமும் இல்லை. ஆனால் இந்தி மொழி திணிப்புக்கு மட்டும் திட்டம் போட்டு, வேகமாக வேலை செய்து வருகிறார்கள்.

இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளும், திட்டங்களும், வழிமுறைகளும் மிகவும் தவறுனவை. இக்காரணங்களாலேயே இந்தியா எந்த ஒன்றுக்கும் வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருந்து வருகிறது. கோடிக் கணக்கான மக்கள்

பசியாலும் - பட்டினியாலும் செத்துக் கொண்டிருக் கிறார்கள். தவறுகளைத்தான் தொடர்ந்து செய்வது என்ற முறையை மத்திய அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. அதன்படிதான் "இந்தி திணிப்பு" திட் டமும் செயல்பட்டு வருகிறது. அறியாமல், தெரி யாமல் ஒன்றைச் செய்பவர்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்களும் திருந்திக் கொள்வார்கள். ஆனால் தெளிவாக அறிந்துகொண்டு தவறுதான் செய்வது என்ற பிடிவாதத்துடன் "இந்தி திணிப்பு" போன்றவைகளைச் செய்து வருபவர்களை எப்படித் திருத்துவது என்றே தெரியவில்லை. முடிந்த அளவுக்கு சொல்லிப் பார்ப்போம், இல்லாவிட்டால் நாம் விலகிக் கொள்வதை (பிரிவினை) தவிர வேறு வழியே இல்லை.

மத்திய அரசின் ஆட்சி மொழி பற்றிய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி மத்திய அரசாங்கம் இந்தி மொழியை மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் கொண்டு வர முடிவு செய்து விட்டது. இவ்வாறு செய்துள் ளது இந்தி மொழி பேசுவோருக்கு ஏற்றத்தையும் மற்ற மொழிகள் பேசுவோருக்கு நிரந்தரத் தாழ்வை யும் கொடுக்கிறது. இது இந்திய அரசியல் சட்டம் 29 - (2) வது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள சம உரிமையைப் பறிப்பதாக உள்ளது. இவ்வாறு ஒரு சட்டத்தின் மூலமாக சம உரிமை கொடுக்கப் பட்டுள்ளது "என்று சொல்லுவதும், மற்றொரு சட்டத்தின் மூலமாக இந்தி மொழி பேசுவோருக்கு மற்ற மொழிகள் பேசுவோர் தொடர்ந்து அடிமை களாக இருக்க வேண்டும் என்று சொல்லுவதும் போன்ற விசித்திரமான - முரண்பட்ட கருத்துக்களை உடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை வேறு

எங்கும் காண முடியாது. சட்டப்படி ஒருவருக்கு நிரந்தர சலுகையும், மற்றவர்களுக்கு நிரந்தரத் தாழ்வும் கொடுக்கப்பட்டிருப்பதை அறிவுடையோர், விழிப்புடையோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின் படி இந்தி மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்தவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்ல. அன்று அரசியல் சட்டத்தை வகுத்த அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள் சொத்து, தொழில், மதம் அடைப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். ஆகவே அவர்கள் சொன்னதை நாம் அப்படியே ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று இல்லை. இந்தியா பல மொழிகள் பேசும் மக்களைக் கொண்ட நாடு. இங்கு உண்மையான மக்களாட்சி நடைபெற வேண்டுமானால் வேறுபட்ட பல மொழிகள் பேசும் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். சமத்துவத்தைப் புறக்கணித்துவிட்டு இந்தி மொழி பேசும் மக்களுக்கு மட்டும் சலுகை காட்டும் அரசியல் சட்டத்தை புறக்கணிப்பதற்கு – அதை மாற்றி அமைப்பதற்கும் இந்தி அல்லாத மொழி பேசுவோருக்கு உரிமை உண்டு. எல்லா மாநிலங்களையும், பல இனங்களையும், பலமொழி பேசுவோரையும் கொண்ட மத்திய அரசு இந்தி மொழி அறிந்தவர்களுக்கு மட்டும் சலுகை கொடுப்பதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

ஒரு சமுதாயத்தின் உயர்விற்கும், தாழ்விற்கும், பண்பாட்டுக்கும், உரிமை வாழ்விற்கும் உயிர் நாடியாக இருப்பது மொழியுரிமைதான். மொழியின் உரிமையை இழந்தவர்கள் ஏற்றம் மிக்க வாழ்வு

வாழ்ந்ததில்லை; அவர்கள் தங்கள் பண்பாட்டையும், நாகரீக உணர்ச்சியையும், உரிமை வாழ்வையும் இழந்து பிறருக்கு அடிமைகளாய் வாழ்ந்ததை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமானால் முதலில் மொழி உரிமையை எடுத்துக்கொண்டு பின்னர் அந் நாட்டை எளிதாக அடிமைப் படுத்தியதை நாம் அறிவோம். பண்டைய நாளில் ஒரு நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை அடிமைப்படுத்திய அரசன் கூட அந்நாட்டின் செல்வளத்தையும், மொழியுரிமையையும் ஒன்றும் செய்யவில்லை. அவ்வாறு அடிமைப் படுத்திய நாடுகளில் எல்லாம் தங்கள் மொழியைப் புகுத்துவது என்ற முறையை செய்திருந்தார்களானால் இன்று உலகம் முழுவதும் சுலப்படமான மொழியல்லவா வழங்கிவரும்? இந்தியாவில் முஸ்லீம் சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபித்த பாபர், அக்பர், அல்லாவுதீன் கில்ஜி போன்றவர்கள் கூட கல்வி நிலையங்களில் உருது மொழிதான் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றோ மத்திய ஆட்சி மொழியாக உருதுதான் இருக்க வேண்டும் என்றோ சொல்லவில்லை. ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தும்கூட கல்வி நிலையங்களில் ஆங்கிலம்தான் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்றோ, நீதி, நிர்வாகங்கள் ஆங்கிலத்தில்தான் நடக்க வேண்டும் என்றோ சொல்லவில்லை. நீதிபதி ஆங்கிலேயராக இருந்தால் குற்றவாளி தமிழில் சொல்லுவதை ஒருவர் மொழி பெயர்த்து அவருக்குச் சொல்லி வந்ததையே அறிவோம். ஆட்சியில் இருக்கிறோம் என்பதற்காக எல்லோரும் ஆங்கிலம்தான் படித்தாக வேண்டும் என்று அவர்கள் எந்த நிலையிலும் வற்புறுத்தவே இல்லை.

ஆங்கிலேயர்கள் எந்த ஒரு மொழியின் உரிமை யையும் பறிக்கவில்லை; ஆங்கிலத்தை விரும்பியவர் கள் படிக்கலாம் என்ற முறையையே கடைபிடித்து வந்தார்கள். இந்தியர்களான ராஜாராம் மோகன்ராய், சுரேந்திரநாத் பானர்ஜி போன்றவர்கள் ஆங்கிலப் பள்ளிகளை இந்தியாவெங்கும் ஆரம்பிக்க வேண்டும் என்று போராடிய பின்னரே ஆங்கிலேயர்கள் ஆங்கிலப் பள்ளிகளை இந்தியாவில் ஆரம்பித்தார்கள். அப்படி இருந்தும் ஆங்கிலத்தை கட்டாயப்பாடமாக்க வில்லை. எளிமை, இனிமை கருதியே எல்லோரும் ஆங்கிலத்தை விரும்பிப் படித்தார்கள். ஆங்கிலேயர் கள் ஆங்கிலம்தான் மத்திய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து ஆங்கி லத்தை பரப்ப ஆரம்பித்து இருப்பார்களானால் அன்று பட்டி தொட்டியெல்லாம் ஆங்கிலத்தைப் பரப்பி இருக்க முடியும். இரு நூறு வருட ஆட்சி காலத்தில் இதை சுலபமாக செய்திருக்க முடியும். முஸ்லீம் அரசர்கள் செய்ய அஞ்சியதை, ஆங்கிலேயர் கள் செய்ய அஞ்சியதை இன்றைய மத்திய அர சாங்கம் செய்ய துணிந்து விட்டதைப் பார்க்கும் போது மத்திய அரசின் ஆட்சி காலம் முடிவடையப் போகிறது என்றுதான் சொல்ல வேண்டும் அல்லது மாநில அரசாங்கங்கள் தங்கள் உரிமையை இழந்து விட்டு நிரந்தர அடிமைகளாக மாறிவிட்டன.

இந்தியா மக்கள் ஆட்சி நடைபெறும் நாடென்றால் இங்கே எப்படி இந்தி என்ற மொழி மட்டும மத்திய ஆட்சி மொழியாக வரமுடியும்? இந்தியாவில் 544 மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 179 மொழிகளுக்கு எழுத் தும் இலக்கணமும் உள்ளன. பெரும்பான்மையான மக்கள் பேசி வருகின்ற 16 மொழிகளை இந்திய

அரசியல் அமைப்பு தேசிய மொழிகளாக அங்கீ கரித்துள்ளது. அப்படியிருக்க இந்தி மட்டும் எப்படி மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் வர முடியும்? மற்ற மொழிகளைக் காட்டிலும் அந்த மொழி எந்த விதத்தில் உயர்ந்தது? எல்லா மொழிகளைக் காட்டிலும் மட்ட ரகமான, கேவலமான ஓர் மொழி. பெரும்பான்மை யோர் பேசுவதால் அது மத்திய ஆட்சி மொழியாக இருக்க தகுதி வாய்ந்தது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் பலம் உடையவர்கள், பெரும்பான்மை யோர், பலம் இல்லாத, குறைந்த தொகையினரை அடக்கி தங்கள் மொழியை திணிப்பதுதான் மக்கள் ஆட்சியா?

42% சத வீதம் மக்கள் இந்தி மொழி பேசுவ தாக பொய்க் கணக்கு சொல்லி வருகிறார்கள். இந்தி மொழி பேசுகின்ற மாநிலங்களிலேயே ஒரு ஊரில் பேசும் இந்திக்கும், மற்றொரு ஊரில் பேசும் இந்திக் கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. இந்தி மொழியை பேசும்போது அடிவயிற்றில் இருந்து சிரமப்பட்டு உச்சரிக்க வேண்டியுள்ளது. பஞ்சாலும், பட்டினி யாலும் வாடிக் கொண்டிருக்கிற மக்கள் இந்தியை பேச ஆரம்பித்தார்களானால் விரைவிலேயே செத்துப் போய் விடுவார்கள். மக்கள் தொகையை குறைக்க வேண்டும், எல்லோரையும் குறைந்த ஆயுளிலேயே சாகடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இந்தியை மத்திய ஆட்சி மொழியாகக் கொண்டு வந்துள்ளார்கள். சாவை விரும்புகிறவர்கள் இந்தியை விரும்பிப் படிக்கட்டும். நீண்ட காலம் வாழவும், சிறப்படையவும் விரும்புகின்ற நாம் ஏன் இந்தியைப் படிக்க வேண்டும்? நமக்கு இந்தி தேவை இல்லை.

காந்தி அடிகளின் நல்லெண்ணத்தையும், தியாக வாழ்வையும் யாரும் குறை கூற முடியாது. ஆனால்

அவர் எந்த ஒரு பிரச்சனையையும் விஞ்ஞானக் கண் ணோட்டத்துடன், எதிர்காலத்தில் மக்கள் இதன்படி நடக்க முடியுமா என்ற சிந்தனையுடன் பிரச்சனைகளை அணுகவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். இக்காரணம் பற்றியே அவர் கொள்கைகளான இந்து -முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, கதர் போன்றவை கள் படுதோல்வி அடைந்தன. காந்தி அடிகள் "இந்திதான் இந்தியாவின் மத்திய ஆட்சி மொழியாக, மாநிலங்களின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்" என்று சொல்லியுள்ளார் என்று பல காங்கிரஸ் தலைவர்கள் பேசி வருகிறார்கள். இவர்கள் தங்கள் சுயநலத்துக்காக காந்தியடிகளின் பெயரை பயன் படுத்துகிறார்கள். அவர் சொன்னது இந்தியை அல்ல; இந்துஸ்தானி என்னும் மொழியைத்தான். அவர் சொன்ன நேரத்தில் இந்தியாவானது ஆங்கிலே யர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்து--முஸ்லீம் களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினால் விரைவில் நாடு விடுதலை பெறும் என்று நம்பப்பட்டது. இந்துக்களின் புனித நூல்களைக் கொண்ட மொழி சமஸ்கிருதம்; அதன் வழி வந்தது இந்தி. முஸ்லீம் கள் பெரும்பாலும் பாரசீக, அரேபிய மொழிகளின் சார்புடைய உருது மொழியை பேசி வருகின்றனர். ஆகையால் இந்தியும் – உருதும் கலந்த "இந்துஸ் தானி" பொது மொழியானால் இந்து – முஸ்லீம் ஒற்றுமை ஏற்படும் என்று நம்பி இந்துஸ்தானியை இந்தியாவின் பொது மொழியாக ஏற்றுக் கொள்ளும் படி வற்புறுத்தினர். மொழியின் மூலமாக இரு இனங்களிடையே ஒற்றுமையை உண்டாக்க முடிய வில்லை. மத வழி தேசியத்தை வற்புறுத்திய ஜின்னா இந்திய உப கண்டத்தில் இருந்து பாகிஸ்தானை பிரித்துக் கொண்டு போய்விட்டார். என்றைக்கு பாகிஸ்தான் பிரிந்ததோ அன்றே காந்தி அடி

களுடைய தத்துவமும் செத்துப் போய் விட்டது. பாகிஸ்தான் பிரிந்த பிறகு "இந்துஸ்தானி இந்தியாவின் பொது மொழி" என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது.

நாடு சுதந்திரம் அடைந்தது. அப்போது இந்தியாவானது பெரிய மாநிலங்களாக மட்டுமே இருந்தது. மாநில உணர்ச்சிகளோ, மொழிப் பற்றுகளோ இல்லாமல் மக்கள் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாத சில காங்கிரஸ் தலைவர்கள் மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி அதை அரசாங்கத்துக்கு அனுப்பினார்கள். காங்கிரஸ்காரர்களே ஆட்சி பீடத்திலும் இருந்ததால் உடனே அவர்கள் மொழி வழி மாநில அமைப்பை மேற்கொண்டார்கள். பல பெரிய மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. மக்களிடையே இருந்து வந்த மொழிப் பற்றுனது மொழி வெறியாக உருவெடுத்தது. கூச்சலும், குழப்பமும், போராட்டமும் ஏற்பட்டது. ஆனல் இன்று மொழியால் மாநிலங்கள் சிதறுண்டு போவதை தடுக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். ஆனல் சமீபத்தில் பஞ்சாப் மாநிலத்தை அரியானு – பஞ்சாப் என்று இரண்டாகப் பிரிந்துள்ளதை அறிவீர்கள். மொழி வழி மாநில அமைப்பு ஒரு புறம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு புறம் மொழியால் மாநிலங்கள் சிதறுண்டு போவதை தடுக்க வேண்டும் என்று பலமாக சத்தம் போட்டு பேசி வருகிறார்கள். இது மிகவும் வேடிக்கையாக இருக்சிறது.

ஒரு நாடென்றல் அதற்கு ஒரு மொழிதான் மத்திய ஆட்சி மொழியாக, மாநிலங்களின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதில்லை. உதா

ரணமாக ஸ்விட்சர்லாந்தில் ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலியன் (லத்தீன்) ரொமானீஸ் ஆகிய நான்கு மொழிகளும், பெல்ஜியத்தில் பெல்ஜியம், ஜெர்மனி, பிரஞ்சு ஆகிய மூன்று மொழிகளும் பின்லாந்தில் பின்னிஸ், ஸ்வீடிஷ் ஆகிய இரண்டு மொழிகளும் ஆட்சி மொழியாக இருந்து வருகின்றன. இலங்கை, மலேயா போன்ற நாடுகளில் கூட சிங்களத்துடன் தமிழும் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. ரஷ்யாவில் பொது எழுத்து வடிவத்தைக் கொண்ட 16 மொழிகள் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது.

உண்மையான மக்களாட்சி நிலவ வேண்டுமாலுல் அரசியல் உரிமைகளோடு, மொழி, பண்பாட்டு உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்ததாலேயே அந்நாடுகளில் எல்லாம் மூன்று அல்லது நான்கு மொழிகள் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. அந்நாடுகளில் சம உரிமை வழங்கப்பட்டிருப்பதால் மக்கள் வெறுப்பும், வேதனையும், அச்சமும், போட்டியும், பூசலும், குழப்பமும் இல்லாமல் அவரவர் வேலையை செவ்வனே செய்து பொருளாதாரத் துறையில் வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். இங்கு இந்திதான் எல்லாம் என்று சொல்லி வெறுப்பையும், வேதனையையும், பயத்தையும், போட்டியையும், பூசலையும், குழப்பத்தையும் வளர்த்து வருகிறார்கள். எக்கனமே பல்வேறு துறைகளிலும் பின்தங்கியுள்ள இந்தியா மேலும் கெட்டு பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டு ராணுவ ஆட்சி அல்லது கம்யூனிஸ்டு ஆட்சி வருவதற்கே இது வழி வகுக்கும்.

உள்ளத்தின் வழி நின்றதுதான் ஒற்றுமையே யொழிய; மொழியின் அடிப்படையில் அமைந்ததல்ல என்பதை கனடாவை, அமெரிக்காவையும் கொண்டு

அறிந்து கொள்ளலாம். கனடாவிலும், அமெரிக்கா விலும் பேசப்படும் மொழி ஆங்கிலம். ஒரே மொழி பேசுகிறோம் என்ற காரணத்தால் கனடா மக்கள் அமெரிக்கா வுடன் இணைந்துவிட வில்லை. தென் அமெரிக்காவில் பிரேஜில் தவிர மற்ற நாடுகள் அனைத்தும் ஸ்பானிய மொழி பேசும் நாடுகள். அப்படி இருந்தும் அவைகள் தனித்தனி நாடாகவே இருந்து வருகின்றன.

மொழி, மதம் பண்பாடு, பழக்க வழக்கங்கள், பாரம்பரியம், ஒரே வரலாறு இவைகளின் அடிப்படை யில்தான் ஒரு நாட்டின் ஒற்றுமை உணர்வு – தேசிய உணர்வு உருவாக்கப் படுகிறது. இவ்வாறு உருவான நாடுகளே இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், ஆப்கா னிஸ்தானம், ஜப்பான் முதலிய நாடுகள். அறிவின் அடிப்படையில், மக்களின் விருப்பத்தை யொட்டி ஒற்றுமையை உருவாக்கி அமைந்த நாடுகள் ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் ஆகும். இவை கள் பல நாடுகளைக் கொண்ட நாடு (Multi-National State) எனப்படும். இந்தியாவும் பல மொழி பேசும் மாநிலங்களைக் கொண்ட ஓர் நாடு. ஆகவே இங்கும் பல மொழிகள் மத்திய ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் பயன் படுத்தப்பட வேண்டும்.

அந்நிய மொழியான ஆங்கிலத்தை அகற்றி விட்டு அங்கு இந்திய மொழியான இந்தியை வைக்க வேண்டும்; அப்பொழுதுதான் நம்நாட்டின் தன் மானம் காப்பாற்றப்படும் என்று அகில இந்திய அரசி யல் தலைவர்கள் ஆர்ப்பாட்டமாக பேசி வருகிறார்கள். இந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதால் மட்டும் இந்தியாவை தன்மானமுள்ள நாடு என்று யாரும் சொல்ல மாட்டார்கள். நாம் வெளி

நாடுகளிடம் பிச்சையோ அல்லது கடனே வாங்காமல் இருக்க வேண்டும். வியாபாரங்களில் மாதிரியாக காட்டும் பொருள் நல்லதாகவும், மொத்தமாக அனுப்பும் பொழுது மட்டரகமான சரக்கு அனுப்புவது என்ற வழக்கமும் இல்லாமல் இருக்க வேண்டும். வியாபாரம், தொழில் ஆகியவைகளில் நேர்மையும், உண்மையும் கடைபிடிக்கப்பட வேண்டும். அப் போதுதான் நம்நாட்டை தன்மானமுள்ள நாடென்று பிறர் மதிப்பார்கள்.

இந்தி பேசுவோர்தான் இந்தியாவை ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படை யில் உருவானதே ஆட்சி மொழிச் சட்டம். இதை மக்கள் ஒன்றுபட்டு எதிர்க்காதது பெரும் வியப்பே. ஆங்கிலேயர்கள் காலத்தில் சர், திவான், ராவ்பகதூர் பட்டங்களை வாங்கிக்கொண்டு, சுதந்திரப் போராட்ட வீரர்களை காட்டிக் கொடுத்தது போலவே இன்று ஆட்சியில் உள்ளவர்களிடம் சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு பலர் தன் சொந்த தாய் மொழி யைக்கூட மறந்து போய்க் கிடக்கின்றனர். இவர் களுக்கும், பணத்திற்கு ஆசைப்பட்டு தன் இல்லாளை மாற்றுனிடம் அனுப்பிவிட்டு, மனக்கோட்டையை பணக்கோட்டையாக மாற்ற முயன்று வரும் கயவர் களுக்கும் வேறுபாடு இல்லை.

நிர்வாகத் துறைகளில் இந்தியைக் கற்றுத் தேர்ந்து வடநாட்டாரோடு போட்டி போட முடியாது என்பதை தெளிவாக அறிந்திருந்தும் பல அரசியல் தலைவர்கள் எதுவும் பேசுவதில்லை. காரணம் அவர் கள் அகில இந்தியக் கட்சியின் அங்கத்தினர்கள். அவர்களுடைய தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. காங்கிரஸ், கம்யூனிஸ்டு, ஜனசங்கம், சுதந் திரா போன்ற பல கட்சிகளில் மொழி உணர்வும்,

பற்றும் கொண்டவர்கள் இருந்தும் அவர்கள் கட்சி யின் கட்டுப்பாட்டைக் கருதி இந்தியை எதிர்ப்ப தில்லை. இதை பயன் படுத்திக் கொண்டே வட நாட்டார் ஒவ்வொரு துறையிலும் வேகமாக இந்திச் சொற்களை திணித்து வருகிறார்கள். இன்று கிராம நல ஊழியர்கள் 'கிராம சேவக்' என்றும் விவசாயி கள் 'கிஷான்கள்' என்றும் அழைக்கப் படுகின்ற இழி நிலைக்கு போய் விட்டோம். இன்னும் கூட விழிப்படையாதது ஆச்சரியத்தையே விளைவிக்கிறது.

குறைந்த அளவிற்கு மத்திய ஆட்சி மொழியாக இந்தி இருக்கட்டும் என்றும் இந்த ஏற்பாட்டைக் கூட ஏற்க மறுப்பவர்கள் மொழி வெறியர்கள் – பிரிவினை உணர்ச்சி கொண்டவர்கள் என்று அகில இந்திய அரசியல் தலைவர்கள் பேசி வருகிறார்கள். மக்களாட்சி நடைபெறுகிற ஒரு நாட்டில் எந்த ஒரு மொழிக்கும் தனிச் சலுகையோ, ஏற்றமோ கொடுக்கப்படக் கூடாது. அவ்வாறு கொடுக்கப் பட்டால் அது பெரிய அநீதியாகும். குறைந்த அளவிற்கேனும் இந்தி மொழி பேசுவோருக்கு தனிச் சலுகை கொடுத்தால் குறைந்த அளவிற்கேனும் அநீதி இருக்கத்தான் செய்யும். அநீதியை ஓரள வுக்கு அனுமதித்தால் அதனால் சலுகை அடைவோன் மேலும் மேலும் சலுகை அடையத்தான் செய்வான். உரிமையை சிறிது விட்டுக் கொடுக்கப் பழகியவன் மிகத் தாழ்வு அடையும் வரை உரிமையின் அருமையை உணரவே மாட்டான். ஆகையால் மொழி சமத்து வத்தை சிறிதளவிற்கேனும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூறுவது ஒரே அடியாக தாழ்ந்து போக உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் மெல்ல மெல்ல தாழ்ந்து போ என்பதற்கு ஒப்பாகும். அவரவர் தாய் மொழி உரிமையை வலியுறுத்திப்

பெரும்பான்மை அகில இந்திய அரசியல் பேசிக்கொண்டு இருந்த காரணத்தாலேயே இப்பொழுது துன்பப் படும் படியான, கேவலமான நிலையை அடைந்திருக்கிறோம்.

தனி மனிதர்கள் தங்கள் சுயநலம் கருதி, பட்டம், பதவி உயர்வை எண்ணி அல்லது பணத்திற்காக எதையும் விட்டுக் கொடுத்துவிட்டு வேடிக்கையும் பார்ப்பார்கள். ஆனால் மொழியுரிமை என்ன தனி மனிதனுடைய உடைமையா? விட்டுக் கொடுத்து விட்டு வேடிக்கை பார்க்க? மொழியுரிமை என்பது ஒரு இனத்தின் – சமுதாயத்தின் உரிமையாகும். அதை விட்டுக் கொடுப்பதற்கு மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களுக்கே உரிமை கிடையாது. அவ்வாறு மொழியுரிமையை துறந்துவிட வேண்டும் என்று சொல்லுபவர்கள் தலைவர்களும் அல்ல; அவர்கள் நாட்டின் துரோகிகள். அவர்களை மக்கள் எதிர் காலத்தில் ஏசுவார்கள் – தூற்றுவார்கள்.

இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத எல்லோருமே அவரவர் தாய் மொழியின் உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டு வேதனைப் படுவதை அறிந்த பண்டித நேரு "இந்தி மொழியினர் அல்லாதோர் விரும்பும் வரை இந்தியுடன் ஆங்கிலமும் தொடர்ந்து (Associate Language) மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் இருந்து வரும்" என்று ஒரு உறுதி மொழி கொடுத்தார். நாம் கேட்பது இந்தியுடன் ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அல்ல. இந்தி மத்திய ஆட்சி மொழியாகவோ, மாநிலங்களின் தொடர்பு மொழியாகவோ என்றும் இருக்கக் கூடாது என்பதுதான். ஆங்கிலம் மட்டும் தொடர்ந்து மத்திய ஆட்சி மொழி

யாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும். இதில் தவறு எதுவுமில்லை. இந்த முறையால் ஏற்ற தாழ்வுகள் மறைகின்றன; வெறுப்பும் வேதனையும் இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறது.

உலக மொழிகளில் ஒன்றான ஆங்கிலத்தை அந்நிய மொழி என்று வெறுப்பதும், அதே நேரத்தில் இந்தி மொழி பேசாதவர்கள் மீது இந்தியைத் திணிப்பதும் இந்திய ஒற்றுமையை உண்டாக்கி விடாது. இந்தியாவை மதத்தின் அடிப்படையில் "ஹிந்தியா" வாக்க முயன்று படுதோல்வி அடைந்த அகில இந்திய அரசியல் தலைவர்கள் அதையே மொழியின் அடிப்படையில் "ஹிந்தியா" வாக்க வேண்டும் என்று சட்டத்தின் துணையையும், ராணுவத்தின் துணையையும் நாடுவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. இந்தியை மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் செய்வதன் மூலம் மற்ற மொழி பேசுவோர் பெருத்த அநீதிக்கு உட்படுகின்றனர். ஆகவே ஆங்கிலத்தை நாம் ஒரு நடுநிலை மொழியாக (Neutral Language) ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும்; வேறு வழியில்லை. ஆங்கிலம் மட்டும் தொடர்ந்து மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் இருந்தால்தான் நாடு தண்டு தண்டாக சிதறுண்டு போகாமல் ஒற்றுமையுடன் இருக்கும். கல்வி, விவசாயம், தொழில், விஞ்ஞானம் போன்றவைகளில் முன்னேற முடியும். இருநூறு ஆண்டுகளுக்குமேல் ஆங்கிலமே தொடர்ந்து கீழ் மட்டம் முதல் மேல் மட்டம் வரை இருந்து வந்துள்ளது. எல்லோருடைய நன்மையையும் கருதி ஆங்கிலத்தையே ஏற்றுக் கொள்வது சிறப்பானது.

இந்தி – ஆங்கிலம் இரண்டையும் மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டால் சிலர் இந்தியின் மூலம் உயர்வடைய நினைப்பர்; சிலர் ஆங்கிலத்தின் மூலம் உயர்வடைய நினைப்பர். இது வெறுப்பையும், வேற்றுமையையும் வளர்க்கும். ஆகவே தெளிவாக, முடிவாக ஆங்கிலம்தான் மத்திய ஆட்சி மொழியாகவும், மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டுமென்று ஒருமனதாகப் போராட வேண்டும். உரிமைகள் அள்ளிக் கொடுக்கப்படும் பொருட்கள் அல்ல. அவைகள் போராடிப் பெற வேண்டியவை. உரிமைகளுக்கான விலைகளே உயிர்கள். உயிர்களை இழக்க நாம் தயங்கக் கூடாது. நம்முடைய உயிர் பெரியதென நினைத்தால் நாம் இந்தி மொழி பேசுவோறுக்கு அடிமைகளாவதைத் தவிர வேறு வழியில்லை. அடிமைகளாய் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதை விட சுதந்திர மனிதனுய் ஒரு நிமிட நேரம் வாழ்ந்திருந்தாலும் அதுவே உயர்ந்தது. போராடி நம்முடைய உரிமைகளைப் பெறுவோம். உரிமைகளைப் பெறுவதையே நம்முடைய கடமையாகக் கொள்வோம். வணக்கம்.

Printed at

U. M. S. POWER PRESS.
COIMBATORE.